



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.2.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0ல், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இணையவழி கழிவு பரிமாற்ற மையம் (Online Waste Exchange Bureau) மற்றும் தொழிற்சாலைகளின் பசுமை மதிப்பீடு (Green Rating of Industries) ஆகியவற்றிற்கான இணையதளத்தை தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.செந்தில் குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஏ.ஆர்.ராகுல்நாத், தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் திரு.எரிக் சொல்ஹெய்ம், டாக்டர் சவுமியா சுவாமிநாதன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் ஜெயந்தி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீநிவாஸ் ஆர்.ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (ஆராய்ச்சி) செல்வி மிதா பானர்ஜி, தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.2.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், உணவு பாதுகாப்புத் துறையில் இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 31 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர்.லால்வேனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.2.2025) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் செயல்படும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள சங்கத்தமிழ் நாள்காட்டியினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் சே.ரா. காந்தி, இணை இயக்குநர் ரெ. கோமகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.